**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**Probate.O.P.No.86/2020**

08.07.2026 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.தீ.சுகந்தமாலா, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிர்மனுதாரர் சாட்சி 2 வெங்கடேசன் த/பெ.துரைசாமி

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

பாகப்பிரிவினை கோரி மனுதாரர் அறிவிப்பு ஏதாவது அனுப்பினாரா என்றால் இல்லை. மனுதாரர் பாகப்பிரிவினை கோரி பஞ்சாயத்து பேச வந்ததாக பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். அது சம்மந்தமாக நான் மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் நான் அறிவிப்பு அனுப்பிவில்லை. மனுசொத்தில் என் தாயாருக்கு உரிமை எதுவும் இல்லை என்றும் நானோ என் தாயாரோ பாகப்பிரிவினை கேட்டு மனுதாரருக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றும் சொன்னால் இதுவரை வாரிசுகளுக்கு திருமணம் ஆகவில்லை, அதனால் நாங்கள் பாகப்பிரிவினை கேட்கவில்லை. வாரிசுகள் என்று நான் யாரை குறிப்பிடுகிறேன் என்றால் என் தாயார், 2ம் எதிர்மனுதாரர் மேனகா, மனுதாரர் அரிராம் ஆகியோரை குறிப்பிடுகிறேன். அவர்கள் மூவருக்கும் திருமணம் ஆகவில்லையா என்றால் என் தாயாருக்கு 40 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது, 2ம் எதிர்மனுதாரர் மேனகாவிற்கு 6 ஆண்டுகள் முன்பு தான் திருமணம் நடந்தது. மனுதாரருக்கு 2024 அல்லது 2025ல் திருமணம் நடந்தது. அவர்களுக்கு எந்த தேதியில் திருமணம் நடந்தது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தாயாருக்கும் அவருடைய தந்தைக்கும் உறவுமுறைக்குள் ஏதாவது மனக்கசப்பு இருந்ததா என்றால் இல்லை. என் தாயாருக்கும் மனுதாரருடைய குடும்ப உறுப்பினர்களுக்கும் இடையில் உறவுமுறைக்குள் மனக்கசப்பு இருந்தது என்றும் அதனால் தான் என் தாய்வழி பாட்டனார் மாணிக்கம் 16.02.2004 தேதியில் மனுதாரர் பெயருக்கு உயில் எழுதிவைத்தார் என்றும் சொன்னால் சரியல்ல. என் தாய்வழி பாட்டனார் மாணிக்கம் கையொப்பம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.5, 6 மற்றும் 15 ஆகிய 3

ஆவணங்களில் உள்ள கையொப்பங்களில் எது மாணிக்கம் கையொப்பம் என்றால் ம.சா.ஆ.5 மற்றும் 6ல் உள்ள கையொப்பங்கள் மாணிக்கம் கையொப்பம் ஆகும், ம.சா.ஆ.15ல் உள்ள கையொப்பம் மாணிக்கத்தின் கையொப்பம் அல்ல. மனுசொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் மற்றும் பூர்வீக சொத்துக்களை கிரையம் கொடுத்த வகையில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு கிரையம் பெறப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்று கூறுவதை உறுதிபடுத்த நான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன வருவாய் வந்தது, எவ்வளவு வருவாய் வந்தது என்று கூறமுடியுமா என்றால் அது ஞாபகம் இல்லை. நான் ஏற்கனவே கூறிய 1967ம் ஆண்டு கிரையம் கொடுக்கப்பட்ட ஆவணம் என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.1 தானா என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் பூர்வீக சொத்தை விற்றதாக வாசகம் உள்ளதா என்றால் அது எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 என்ன ஆவணம் என்று கூறமுடியுமா என்றால் சொத்து கிரையம் வாங்கியதற்கான பத்திரம். பூர்வீக சொத்தை விற்று அந்த சொத்து கிரையம் வாங்கப்பட்டதாக ம.சா.ஆ.4ல் வாசகம் உள்ளதா என்றால் தெரியவில்லை. பொதுவாக குடும்ப விஷயங்களில் மாணிக்கம் சுயமாக முடிவெடுப்பாரா அல்லது யாரையாவது கேட்டு முடிவெடுப்பாரா என்றால் அது எனக்கு தெரியாது. மாணிக்கத்தின் இறுதி காலத்தில் அவருடன் இருந்து அவருக்கு பணிவிடைகள் செய்தது யார் என்றால் என் தாயார் செய்தார். எந்த வருடம் வரை என் தாயார் மாணிக்கத்திற்கு பணிவிடை செய்தார் என்றால் எப்போதெல்லாம் மாணிக்கத்திற்கு தேவை ஏற்படுகிறதா அப்போதெல்லாம் பணிவிடை செய்வார். மாணிக்கம் அழைப்பாரா அல்லது என் தாயார் அவராகவே செல்வாரா என்றால் இருவரும் 3 கி.மீ தூரத்திற்குள் வசித்துவந்தார்கள், ஆகவே என் தாயார் அடிக்கடி அவராகவே சென்று மாணிக்கத்தை பார்த்துவிட்டு வருவார். இந்த விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் என் தாயார் என்னிடம் கூறியுள்ளார். இறக்கும்போது மாணிக்கத்திற்கு எவ்வளவு கடன் இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், சுமார் ரூ.50,000/- கடன் இருந்தது. முன்பணமாக ரூ.5000/- மாணிக்கத்திற்கு கொடுத்தோம். மாணிக்கத்தின் கடனை பைசல் செய்தது யார் என்றால் என் அம்மா தான் பைசல் செய்தார். பைசல் செய்தபோது நானும் உடன் இருந்தேனா என்றால் இல்லை. மாணிக்கம்

விட்டுச்சென்ற கடன்களை மனுதாரரும் அவருடைய தாயாரும் தான் பைசல் செய்தார்கள் என்றும் என் தாயார் பைசல் செய்ததாக நான் சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. கூட்டுப்பட்டா எப்படி வழங்கப்படும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கூட்டுப்பட்டாவில் என் தாயார் பெயரை எப்படி சேர்த்தாகள் என்றால் வாரிசு என்பதால் சேர்த்தார்கள். 2009ல் கூட்டுப்பட்டா வழங்கியதற்கும் 2004ல் மாணிக்கம் உயில் எழுதியதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் வழக்கை திசைதிருப்ப கூட்டுப்பட்டா பற்றி கூறியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. சமாதான பேச்சு பேச வந்த சமயத்தில் என் தாயாருக்கு மனுதாரர் தரப்பில் கொலைமிரட்டல் விடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. மனுதாரரோ அல்லது அவர் தாயாரோ எந்த காலத்திலும் எங்களுடன் சமாதான பேச்சுவார்த்தை பேச வரவில்லை என்றும் அவர்கள் சமாதான பேச்சுவார்த்தை பேச வந்ததாக கூறியுள்ளது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றும் என் தாயார் கூறிய விபரங்களை தான் நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. மாணிக்கம் மனுதாரர் பெயருக்கு உயில் எழுதிவைத்த விபரம் எனக்கு தெரிந்தும் நான் முன்னுக்குப்பின் முரணாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாய் மூலமாக மனுதாரருக்கு சேரவேண்டிய சொத்துக்களை நான் அடைவதற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

ARUMUGAM MANIMOZHI

Digitally signed by ARUMUGAM MANIMOZHI
Date: 2026.07.08 17:29:21 +0530

Principal District Judge,

Villupuram.